





**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 28.02.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- நியமனங்கள்







# தமிழக நிகழ்வுகள்

- **தமிழகத்தில் அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டுக்கு** தனியார் நிறுவனங்கள், தனியார்அமைப்புகள் இணையதளம் மூலம் இதுவரை **ரூ.127 கோடி நிதியுதவியை** வழங்கியுள்ளன என்று **பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்** கூறினார்.
    - **செய்தித் துளிகள்**
        - முன்னாள் மாணவர்கள், தனியார் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் ஆகியோர் அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டுக்கு நிதிவழங்க பிரத்யேக இணையதளத்தை பள்ளிக் கல்வித்துறை உருவாக்கியது. இதில் இதுவரை ரூ.127 கோடி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தேசிய நிகழ்வுகள்

- **புந்தேல்கண்ட் விரைவுச்சாலை திட்டத்துக்காக** உத்திரப்பிரதேச மாநிலம் சித்திர கூடத்தில் **பிரதமர் நரேந்திர மோடி** பிப்ரவரி 29 அன்று **அடிக்கல் நாட்டுகிறார்**.
    - உத்தரப்பிரதேச அரசால் கட்டப்படும் புந்தேல்கண்ட் விரைவுச்சாலை அந்த மாநிலத்தின் சித்திரகூடம், பாண்டா,

ஹமீர்பூர், ஜலான் மாவட்டங்களின் ஊடாகச் செல்கிறது. இந்த விரைவுச்சாலை, ஆக்ரா-லக்னௌ விரைவுச்சாலை மற்றும் யமுனை விரைவுச்சாலை ஆகியவற்றின் வழியாக புந்தேல்கண்ட் பகுதியை தலைநகர் தில்லியுடன் இணைக்கிறது.

- **செய்தித் துளிகள்**
  - கடந்த 2018-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மத்தியஅரசு அறிவித்த உத்தரப்பிரதேச பாதுகாப்பு தளவாட தொழிலக வழித்தட திட்டத்துடன் இணைந்த வகையில் இந்த விரைவுச்சாலை இருக்கும் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **இந்திய விண்வெளி அறிவியலின் தந்தை என்றழைக்கப்படும் விஞ்ஞானி விக்ரம் சாராபாய்** நூற்றாண்டை முன்னிட்டு இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின் (இஸ்ரோ) மகேந்திரகிரி மையம் சார்பில் விக்ரம் சாராபாய் நூற்றாண்டு விண்வெளி அறிவியல் கண்காட்சி பிப்ரவரி 27 அன்று தொடங்கியது. மதுரை வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற தொடக்க விழாவுக்கு மகேந்திரகிரி விண்வெளி மையத்தின் இயக்குநர் கே.அழகுவேலு தலைமை வகித்தார்.
  - **செய்தித் துளிகள்**
    - இந்திய விண்வெளி அறிவியலின் தந்தை விக்ரம் சாராபாயின் நூற்றாண்டு விழாவை 2019 ஆகஸ்ட் 12 முதல் அறிவியல் விழாவாக இஸ்ரோ கொண்டாடி

வருகிறது. நாடு முழுவதும் 100 இடங்களில் விண்வெளிக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதன் ஓர பகுதியாக தமிழகத்தில் 6 இடங்களில் கண்காட்சி நடத்தப்படுகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- நிலவைப் போலவே பூமியை சுற்றி வரும் இன்னொரு இயற்கைப் பொருளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஒரு கார் அளவே கொண்ட அந்த குறுங்கோளை அமெரிக்காவின் நாசா உதவியுடன் செயல்படும் அந்த நாட்டு **காடலினா ஸ்கை சர்வே அமைப்பின் விஞ்ஞானிகள்** கண்டறிந்துள்ளனர்.
    - **செய்தித் துளிகள்**
        - ஏற்கெனவே, **'2006 ஆர்ஹெச் 120' என்ற குறுங்கோள் பூமியைச் சுற்றிவரும் நிலையில்**, தற்போது அதேபோன்ற **2-ஆவது குறுங்கோள் கண்டறியப்பட்டுள்ளது** குறிப்பிடத்தக்கது.

## நியமனங்கள்

- **சட்டத்துறை செயலாளராக சி.கோபி ரவிகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.**
    - சட்டத்துறை கூடுதல் செயலராக இருந்து வந்த அவர் செயலாளர் பொறுப்பை கூடுதலாகக் கவனித்து வந்தார். இந்த

நிலையில்,அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக பிப்ரவரி 27 அன்று வெளியிட்ட உத்தரவில் தலைமைச் செயலாளர் கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

## திருக்குறள்

**குறள்** :**122**

குறள் பால் :அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் :நடுவுநிலைமை

**காக்கபொருளாஅடக்கத்தைஆக்கம்**

**அதனினூஉங் கில்லைஉயிர்க்கு.**

**விளக்கம் :** மிக்கஉறுதியுடன் காக்கப்படவேண்டியதுஅடக்கமாகும். அடக்கத்தைவிடஆக்கம் தரக்கூடியதுவேறொன்றும் இல்லை.

We Shine Academy ™